DEPOSITION OF WITNESS

-----

IN THE COURT OF PRINCIPAL JUDGE, CHENNAI

**CC.09/2023 - PW4**

Name : Mr.K.Manivannan

Solemnly affirmed in accordance with provisions of Act X of 1873 on the 29th day of October, 2024.

---

எதிரி ஆஜர்.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி** :-

அ.சா.ஆ.24 ல் முதலாவது பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள USB External HDD and DVD நீதிமன்றத்தால் எங்களுக்கு அனுப்பப்பட்டதா என்றால் USB External HDD நீதிமன்றத்தால் எங்களுக்கு அனுப்பப்பட்டது. DVD எங்கள் அலுவலகத்திற்கு உரியது. USB External HDD ல் இருந்த Item No.1 to 5 Files ஐ நாங்கள் நகல் எடுத்து கொண்டு USB External HDD யை நீதிமன்றத்திற்கு அனுப்பிவிட்டோம் என்றால் சரிதான். Item No.1 to 5 Files களில் என்னென்ன Files இருந்தது என்று நான் அ.சா.ஆ.24 அறிக்கையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நீதிமன்றத்தில் கேட்டுக்கொண்டது போல் நகலெடுத்து மட்டும் கொடுத்துள்ளோம். அ.சா.ஆ 24 அறிக்கையில் பின்னிணைப்பிலும் அந்த File கள் குறித்து நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். பார்வையில் குறிப்பிடப்பட்டுள்ள Letter Nil dated 19/02/2020 நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்றாலும் அதில் என்ன குறிப்பிடப்பட்டிருந்தது என்பது குறித்தும் எனது அறிக்கையில் கூறவில்லை என்றாலும் சரியல்ல. அதில் நீதிமன்றத்தால் கொடுக்கப்பட்ட கடிதம் ஆகும். அது அறிக்கையின் பார்வையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த கடிதத்தின்படிதான் ஆய்வு செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆவணத்தில்

பார்வையில் குறிப்பிடப்பட்டுள்ள நீதிமன்ற கடிதத்தில் நீதிமன்றம் அதில் இணைக்கப்பட்டுள்ள File களின் விவரங்களை அறிக்கையாக கோரியிருந்தது என்றால் சரியல்ல. அந்த கடிதத்தில் " A Copy visible files pertaining to the following devices “ என்றுதான் குறிப்பிடப்பட்டிருந்தது. அந்த நீதிமன்ற கடிதத்தை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் அந்த கடிதம் நீதிமன்றத்தால் எங்கள் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டது. நீதிமன்றம் உத்தரவிட்டால் தாக்கல் செய்கிறோம். அந்த கடிதத்தில் Item No.1 to 16 Files க்கான Details எடுக்க சொல்லி கோரப்பட்டிருந்தது என்றாலும் நான் 1 முதல் 5 Files களுக்கான Details மட்டுமே எடுத்தேன் என்றாலும் சரியல்ல. அ.சா.ஆ.24 ஆவணத்தில் 2 வது பாராவில் One Sealed card board box containing 16 No’s of digital devices என்று குறிப்பிடப்பட்டுள்ளது, அந்த 16 Digital Devices எங்களுக்கு அனுப்பிவைக்கப்படவில்லை என்றால் சரியல்ல. எங்கள் அறிக்கையில் நாங்கள் குறிப்பிட்டுள்ளபடி பார்வையில் காட்டப்படுள்ள கடிதம் 3 ன்படி 16 மாதிரிகளும் பெறப்பட்டன. தற்போதைய வழக்கு மற்றும் அறிக்கையில் பார்வை 1 ல் குறிப்பிடப்பட்டுள்ள கடிதத்தின்படி அவற்றில் இருந்த 1 முதல் 5 வரையிலான மாதிரிகள் மட்டும் நகல் எடுத்து வழங்கப்பட்டன. 16 Digital Devices பெற்றிருந்தும் எனது விருப்பத்தின் படி 1 முதல் 5 வரையிலான கோப்புகளுக்கு மட்டும் நகல் எடுத்து அனுப்பினேன் என்றால் சரியல்ல. நான் நகலெடுத்த Hard Disc ஒரு Secondary Evidence என்றால் நான் சட்டப்படி அது என்ன என்று எனக்கு தெரியாது. ஆனால் அது Primary Devices லிருந்து நகல் எடுக்கப்பட்ட Hard Disc ஆகும். நான் அந்த Hard Disc ஐ நீதிமன்றத்திற்கு அனுப்பாமல் புலனாய்வு துறைக்கு அனுப்பினேன் என்றால் சரியல்ல. நீதிமன்றத்தில் இருந்து பெறப்பட்ட Hard Disc மீண்டும் நீதிமன்றத்திற்கு தான் அனுப்பப்பட வேண்டும் என்றாலும், அதை புலனாய்வு முகமைக்கு அனுப்பலாம் என்று

நான் கூறியது தவறு என்றாலும் சரியல்ல. 1 TB கொள்ளவு கொண்டு Hard Disc நான் நகல் எடுத்த Files 1 முதல் 5 ன் கொள்ளவு எவ்வளவு என்று என்னால் கூற முடியுமா என்றால் கூற முடியும். ஆனால் அது சம்பந்தமாக நீதிமன்றத்தில் இருந்து கேள்வி எதுவும் பெறப்படவில்லை. ஆய்வறிக்கையில் கண்டுள்ள இனம் 1 முதல் 5 வரையிலான் File களை 1 TB கொண்ட Hard Disc ல் நகல் எடுக்க இயலாது என்றால் சரியல்ல. நீதிமன்றம் பார்வையிடத்தக்க Visible Files மட்டும் கேட்டதால் ஒவ்வொரு Device லும் சிறிதளவுதான் இருந்தது. எனவே ஒரு 1 TB போதுமான அளவு இருந்தது. நீதிமன்றம் எந்த இடத்திலும் Files ஐ தேர்வு செய்து நகல் எடுத்து கொடுக்கும் படி எனக்கு அனுப்பவில்லை என்று சொன்னால் சரிதான். 16 Digital Device ம் எனக்கு அனுப்பப்பட்டதால் நான் ஒரே அறிக்கைதான் கொடுத்திருக்க வேண்டும் என்றாலும் அ.சா.ஆ.24 மற்றும் அ.சா.ஆ.25 என இரண்டு ஆய்வறிக்கைகளும் கொடுத்தது தவறு என்றாலும் சரியல்ல. 16 Digital Device ம் உள்ள 16 வகையான File கள் கோரப்பட்டது என்றாலும் நான் 15 File கள்தான் அனுப்பினேன் என்றாலும் சரியல்ல. அ.சா.ஆ.24 ல் 1 முதல் 5 ம், அ.சா.ஆ.25 ல் 6 முதல் 15 வரையிலும் உள்ள மாதிரிகளில் இருந்துதான் நகல் எடுத்து வழங்கும்படி நீதிமன்றத்தில் இருந்து கேட்கப்பட்டது. ( சாட்சி தங்கள் துறைக்கு **<u>மாநகர குற்றவியல் நீதித்துறை நடுவரிடம் இருந்து வந்த 19.02.2020 முத்திரையிடப்பட்ட தேதியிடப்படாத ஒரு வேண்டுகோள் கடிதத்தையும், 06.03.2020 தேதியிட்ட 1 வேண்டுகோள் கடிதத்தையும்</u>** தாக்கல் செய்கிறார். அவை முறையே **<u>அ.சா.ஆ.26 மற்றும் அ.சா.ஆ.27</u>** ஆக குறியீடு செய்யப்படுகிறது. ) ( அ.சா.ஆ 26 மற்றும் அ.சா.ஆ.27 ன் நகல்கள் எதிரிக்கு கொடுக்க உத்தரவிடப்படுகிறது ) அ.சா.ஆ.27 கடிதத்தில் நீதிமன்றம் அதில் கண்ட 10 Digital Devices ஐ உதவி ஆய்வாளர் பிரபாகரன் மூலமாக அனுப்பியதை நான் எங்கள் அலுவலகத்தில் பெறவில்லை என்றால் சரிதான்.

முதல் வழக்கான CF/29/2020 என்ற வழக்கில் 16 Digital Devicesம் எங்கள் அலுவலகத்தில் பெறப்பட்டு எங்கள் அலுவலகத்திலேயே இருந்தது. முதலில் 5 மாதிரிகளுக்காக ஒரு காவல் உதவி ஆய்வாளரையும் மற்ற 10 மாதிரிகளுக்காக ஒரு காவல் உதவி ஆய்வாளரையும் நியமித்து அனுப்பியது. இரண்டாவதாக வந்த உதவி ஆய்வாளர்தான் திரு. பிரபாகரன் ஆவார். மேற்படி 16 இனங்களையும் எங்களிடம் ஒப்படைத்த கடிதம் எங்கள் அலுவலகத்தில் உள்ளது அதன்படி திரு. சி.தேவராஜ் காவல் உதவி ஆய்வாளர் என்பவர் ஒப்படைத்தார். அந்த கடிதத்தின் தேதி 13.02.2020. அந்த கடிதத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்து உள்ளேனா என்றால் இல்லை. அ.சா.ஆ.24 மற்றும் 25 ஆய்வறிக்கைகளில் 13.02.2020 தேதியிட்ட கடிதத்தின் மூலம் பெறப்பட்டதாக கூறவில்லை என்றால் சரியல்ல. அது ஆய்வறிக்கைகளின் பார்வையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த கடிதம் என் வசம் உள்ளது. அதை நான் தாக்கல் செய்கிறேன். ( சாட்சி தாக்கல் செய்த நீதிமன்றத்தால் 13.02.2020 என முத்திரையிடப்பட்ட வேண்டுதல் கடிதம் அ.சா.ஆ. 28 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அ.சா.ஆ.28 ன் நகல் எதிரிக்கு கொடுக்க உத்தரவிடப்படுகிறது. )

( இந்நிலையில் எதிரி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது )

| |
|---|
| Typed to my dictation in my presence and hearing and under my personal dictation and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted and signed by the witness to be correct. |
| **Principal Judge** |